## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.35/2023** **நாள் : 18.05.2023**

**அனைத்து மாநகராட்சி ஆணையாளர்களும் தூய்மைப்பணி, குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பணிகளை தினந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும்.**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் அறிவுறுத்தல்**

இன்று (18.05.2023) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் அனைத்து மாநகராட்சிகளின் ஆணையாளர்களுடன் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகளின் நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாக ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு **"செழிப்பு"** எனப் பெயரிட்டு அறிமுகப்படுத்தியும், மேலும், சீர்மிகு ஆளுமை திட்டத்தின்கீழ் "**விரைவு துலங்கல் குறியீடு** - QR Code" மென்பொருள் செயலியினையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வெளியிட்டுள்ளார்கள். இச்செயலி மூலம் பொதுமக்கள் உள்ளாட்சி சேவைகளின் மீதான நிறை குறைகளை தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சொத்து வரி உள்ளிட்ட நிலுவைகளைப் பற்றிய விவரங்களும் இச்செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம். பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் பெறுவது போன்ற வசதியும் இச்செயலியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சிகளில் உள்ள 629 இடங்களில் உள்ள நுண்ணுயிர் உர மையங்கள் மூலம் கிடைக்கப்பெறும் **"செழிப்பு"** உரத்தினை நுகர்வோர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பான

விவரங்களை மாநகராட்சி ஆணையாளர்கள் அனைத்து மக்களையும் சென்றடையும் வகையில் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து ஆணையாளர்களும் 2023-2024ஆம் ஆண்டிற்கு மாநகராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிநிலைமைக்கேற்ப திட்டங்களை உடனடியாக தயார் செய்து பணிகள் துவங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் கடந்த 2 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் பொதுமக்களை சரியாக சென்றடைந்துள்ளதா என்பதை தொடர்ந்து ஆய்வு செய்து வரவேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலை அமைப்புப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள், மழைநீர் வடிகால் அமைப்புப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எந்தவித தொய்வுமின்றி மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும். மேலும், புதிய திட்டங்களுக்கான கருத்துருக்கள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனைத்துப் பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் இருப்பதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் குடிநீரின் தரத்தினை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்தில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் விழிப்புணர்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் திடக்கழிவு மேலாண்மை செயலாக்கம் தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளது. இக்குறும்படங்களை பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், திரையரங்குகள், உள்ளூர் தொலைக்காட்சி ஆகியவற்றில் திரையிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சீர்மிகு நகர திட்டப் பணிகள் நடைபெற்றுவரும் மாநகராட்சிகளில், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் அனைத்து பணிகளையும் முடிக்கப்பெற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்திற்குத் தேவையான வாகனங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாகனங்களின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும். பொதுமக்களிடையே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தொடர்பான விழிப்புணர்வு பணிகளை தொடர்ந்து செய்து வரவேண்டும். இப்பணிகளை அனைத்து மாநகராட்சிகளிலும் தொய்வின்றி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அனைத்து ஆணையர்களும் மேற்கொள்ள வேண்டும். மாநகரகப் பகுதிகளிலுள்ள பொது / சமுதாய கழிப்பறைகள் அனைத்தும் முறையாகவும், சுத்தமாகவும் பராமரிப்பதை உறுதி செய்யவேண்டும். மாநகராட்சிகளுக்குச் சொந்தமான அனைத்து முறையான கட்டிடங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். மாநகராட்சிகளுக்குச் சொந்தமான காலியிடங்களை ஒரே மாதிரியான வண்ண வேலிகள் அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

குடிநீர் இணைப்பு, கட்டிட அனுமதி, வரி விதிப்பு, பிறப்பு மற்றும் இறப்பு குறித்த விண்ணப்பத்தின் மீது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது தீவிர கவனம் செலுத்தி உடனடியாக தீர்வுகளை வழங்கிட வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் உரிய காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை புனரமைப்பது, வரிவிதிப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நேரடி விசாரணைகள் மேற்கொள்வது, தூய்மைப்பணி மற்றும் குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பணிகளை மாநகராட்சி ஆணையாளர்கள் தினந்தோறும் ஆய்வு செய்திட வேண்டும்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மரு.ஜெ.இராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிருவாக இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.அம்பலவாணன்,I.A.A.S.. பேரூராட்சிகள் இயக்குநர் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (பணிகள்) மரு.ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப. மற்றும் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்